REGISTRAR OF NEWS PAPER FOR INDIA REGN. NO. 15261/2005 (R.DIS NO.1834/04)



# CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

FILM - 20 CLICK - 12
MARCH 2025 ₹. 1

## அறிவிப்பு

60 வயதுக்கு உட்பட்டவர்கள் நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தில் இணைந்து குடும்ப பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இப்படிக்கு

**P. துரைபாபு**
CVPA செயலாளர்



## CVPA NNT குழு உறுப்பினர் மறைந்த திரு. சேகர் அவர்களின் குடும்பத்திற்கு CVPA NNT நிதியில் இருந்து 1 லட்சத்து 9 ஆயிரத்து 800 ரூபாய் வழங்கப்பட்டது

சங்க உறுப்பினர்களுக்கு வணக்கம்!

நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தின்கீழ் இதுவரை 651 பேர் CVPA NNTயில் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர். இதில் துரதிஷ்ட வசமாக தென் சென்னை எஸ்-2, ஆதம்பாக்கம் பகுதியை சேர்ந்த CVPA NNT உறுப்பினர் திரு. R. சேகர் அவர்கள் கடந்த மாதம் திடீரென உடல் நலம் பாதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி இறந்து போனார். அவருடைய குடும்பத்தினருக்கு, CVPA நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், மற்றும் நமது சங்க பொதுக்குழு உறுப்பினர்கள், அவருடைய இல்லத்திற்கு நேரில் சென்று CVPA சார்பிலும், NNT குழு சார்பிலும் நமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொண்டோம். CVPA NNT யில் அங்கம் வகித்து வந்த திரு. R.சேகர் அவர்களின் குடும்பத்திற்கு கடந்த 14.03.2025 அன்று நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு நிதியில் இருந்து 1 லட்சத்து 9 ஆயிரத்து 800 ரூபாய்க்கான காசோலை, திரு. R.சேகர் அவர்களின் மனைவிதிருமதி.S.அனுராதாசேகர்அவர்களிடம்,நமது சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர், பி.ஆர்.ஓ தென் சென்னை, S2 துணைத்தலைவர், K.ஜெயக்குமார், இணைச்செயலாளர், J. ராதாகிருஷ்ணன், ஆதம்பாக்கம் பகுதி செயலாளர் G. திலீப் குமார் மற்றும் ஏனைய சங்க நிர்வாகிகள், மாநில அமைப்பாளர், முன்னாள் நிர்வாகிகள் மற்றும் பகுதி செயலாளர்கள் முன்னிலையில் வழங்கப்பட்டது. காசோலையை பெற்றுக் கொண்ட திருமதி. S.அனுராதா சேகர் அவர்கள் நமது சங்கத்தையும், நாம் செயல்படுத்தி கொண்டிருக்கும் நமக்கு நாமே திட்டத்தையும் வெகுவாக பாராட்டினார். இந்த குடும்பம் சற்று வசதியான குடும்பம் தான் என்றாலும், இக்கட்டான ஒரு சூழ்நிலையில் CVPA NNT நிதியில் இருந்து கொடுத்த பணம் தங்களுக்கு பெரிதும் உதவியாக இருந்தது என்று அவர் கூறியதோடு, நமது சங்க நிர்வாகிகளுக்கும், பகுதி செயலாளர்களுக்கும் தங்கள் குடும்பத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

இந்த திட்டம் கொரோனா காலத்திற்கு முன்பாக செயல்பாட்டிற்கு கொண்டு வந்திருந்தால், நம்மை விட்டு பிரிந்து சென்ற 50க்கும் மேற்பட்ட இளம் கலைஞர்களின் குடும்பங்களுக்கு பெரும் உதவியாக இந்த திட்டம் இருந்திருக்கும் என்று சங்க நிர்வாகிகளை சந்திக்கும் உறுப்பினர்கள் கேள்வி எழுப்புகின்றனர். இவர்களுக்கெல்லாம் நாங்கள் சொல்லிக் கொள்ள விரும்புவது, இந்தத் திட்டம் நமக்கானது என்பதை விட நமது சக கலைஞனின் குடும்ப பாதுகாப்பிற்கானது என்ற எண்ணம் நமக்குள் ஏற்பட வேண்டும். கருணை உள்ளம் கொண்ட ஆயிரம் உறுப்பினர்களை இத்திட்டத்தில் இணைப்பதன் மூலம், நமது சக கலைஞனின் குடும்ப பாதுகாப்பிற்கு இரண்டு லட்ச ரூபாய் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். அதே சமயம் குறைந்தபட்சம் ஆயிரம் போட்டோ வீடியோ கலைஞர்களின் குடும்பங்களை நமது சங்கத்தின் பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டு வர தீவிர முயற்சி எடுத்துக் கொள்வோம். இதுவரை இந்த திட்டத்தில் இணைந்திருக்கும் CVPA NNT உறுப்பினர்கள் அனைவரையும் கருணை உள்ளம் கொண்ட கொடையாளர்களாகவே கருதுகிறோம். குறிப்பாக, வடசென்னை ரெட்ஹில்ஸ் பகுதி செயலாளர் திரு.மேகநாதன் அவர்கள், இத்திட்டத்திற்கு தன்னுடைய ஓய்வூதியத்தில் இருந்து, தன் வாழ்நாள் முழுவதும் மாதம் தோறும் ஆயிரம் ரூபாயை ECS மூலமாக (வருடத்திற்கு பன்னிரண்டாயிரம் ரூபாய்) செலுத்த தொடங்கிவிட்டார். இது இவர் நமது கலைஞர்கள் மீதும், இத் தொழில் மீதும் வைத்திருக்கும் நன்மதிப்பை காட்டுகிறது. இவரை நாம் அனைவரும் மனம் திறந்து (98405 79424) பாராட்டுவோம். இவரைப் போல இன்னும் சிலர் இணைவார்கள் என்று உறுதியாக நம்புகின்றோம்.

இப்படிக்கு, **P.துரைபாபு**
செயலாளர்




## கலைமாமணி யோகா அவர்களின் நூல் வெளியீட்டு விழா

### CVPA நிர்வாகிகள் நேரில் சென்று வாழ்த்து!!

நமது CVPA சங்கத்தின் கௌரவத் துணைத் தலைவர் கலைமாமணி யோகா அவர்கள் எழுதிய "**இயக்குனர் இமயத்துடன் 25 வருட இனிய நினைவுகள்**" எனும் நூல் வெளியீட்டு விழாவுடன் அவரது 78வது பிறந்தநாள் விழாவும் சென்னை நாரதகான சபாவில் 17.02. 2025 அன்று டாக்டர் நல்லி குப்புசாமி செட்டியார் (பத்மபூஷன் விருதாளர்) அவர்களின் தலைமையில் நடைபெற்றது. திரைப்பட இயக்குனர் எஸ்.பி முத்துராமன் அவர்கள் நூலை வெளியிட, முதல் பிரதியை இயக்குனர் கே.பாக்கியராஜ் அவர்கள் பெற்றுக் கொண்டார். நமது CVPA சங்கம் சார்பாக சங்க நிர்வாகிகள் , மாநில சங்க அமைப்பாளர், மற்றும் பகுதி செயலாளர்கள்,பொதுக்குழு உறுப்பினர்களும், இவ்விழாவில் கலந்துகொண்டு யோகா அவர்களை வாழ்த்தினார்கள்.

# நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தில் எல்லோரும் ஒன்றிணைய வேண்டும்
# CVPA NNT நிதி உதவி பெற்றுக் கொண்ட திருமதி.S. அனுராதா சேகர் வேண்டுகோள்!

எனது கணவர் திரு.R.சேகர் அவர்கள் போட்டோகிராபராகவும், வீடியோகிராபராகவும் தொழில் செய்து வந்தார். கடந்த ஜனவரி மாதம் என் கணவர் CVPA-வில் ரெனிவல் செய்துவிட்டு, 2025 ஆம் ஆண்டுக்கான நமது சங்கத்தின் டைரி, பாக்கெட்டைரி காலண்டர் போன்றவைகளை வாங்கி கொண்டு வந்து என்னிடம் காட்டி பெருமை பட்டுக் கொண்டார். அது மட்டும் இல்லாமல் சங்கத்தில் இப்போது நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு என்கிற ஒரு புதிய திட்டம் CVPA NNT தொடங்கி இருப்பதாகவும்,அதில் நானும் ஒரு கொடையாளியாக இணையப் போவதாகவும், அதற்காக எனது ஆதார் கார்டு மற்றும் போட்டோ வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இதெல்லாம் எதற்கு என்று நான் கேட்பதற்கு முன்பாகவே, இந்த திட்டத்தில் இணையும் உறுப்பினர்களுக்கு ஏதேனும் ரிஸ்க் ஆகிவிட்டால், பாதிக்கப்படும் குடும்பங்களுக்கு CVPA NNT நிதியிலிருந்து இருந்து பணம் கொடுப்பார்கள் என்று கூறினார். இந்தத் திட்டத்தில் அவர் இணையும் போது, அனைவருக்கும் உதவும் நோக்கத்தில் ஒரு கொடையாளராகவே CVPA NNT குழுவில் தன்னை அவர் இணைத்துக் கொண்டார். அப்போது, நாங்கள் சாதாரணமாகத்தான் அதை எடுத்துக் கொண்டோம். ஆனால், இத்திட்டத்தில் சேர்ந்த குழு உறுப்பினர்கள் முதலில் உயிர் நீத்தவராக









இவர் இருப்பார் என்று நினைக்கவில்லை. இது தர்ம சங்கடமான விஷயம்தான். பிறப்பு இறப்பு எப்போதும் நம் கையில் இல்லை .எந்த நிமிடமும் எதுவும் நடக்கலாம். என்ற நிலையில் தான் நாம் எல்லோரும் இருக்கிறோம்.

என் கணவரை ஒரு சாதாரண நிமோனியா காய்ச்சலுக்காகத் தான் மருத்துவமனையில் அனுமதித்தோம். மறுநாளே சீரியஸ் கண்டிஷனுக்கு வந்துவிட்டார். இரண்டு நாட்கள் ICU-வில் வெண்டிலேட்டரில் வைத்திருந்தும் சிகிச்சை பலனின்றி இறந்து போனார். இதற்குள் என்னிடம் இருந்த இரண்டு லட்சம் ரூபாய் செலவாகிவிட்டது. என் மகனும் எனக்கு உதவியாக இருந்தார்.

என் கணவருக்கு இறுதி சடங்கு முடித்து மயானத்துக்கு எடுத்து செல்ல தயாராகிக் கொண்டிருந்தோம். அப்போது என் கணவர் உடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக சங்கத்தில் இருந்து நிர்வாகிகள் வந்திருந்தார்கள். அவர்கள் என்னை அணுகி, சங்க உறுப்பினர்கள் யாரேனும் இறந்து போனால், அவர்களுக்கு ஈமச்சடங்கு செய்வதற்காக எங்கள் சங்கத்தின் சார்பாக 20 ஆயிரம் ரூபாய் வழங்குவது வழக்கம். அந்த பணத்தை பெற்றுக் கொள்ளுமாறு என்னிடம் கூறினார்கள். இது நிஜமா என்று முதலில் யோசித்தேன். எனக்கு அந்த பணத்தை வாங்குவது மிகவும் கஷ்டமாக தெரிந்தது. எனவே நானும் எனது மகனும் அந்த பணத்தை வேண்டாம் என்று சங்க நிர்வாகிகளிடம் சொல்லிவிட்டோம். ஆனால் அவர்களோ இந்த பணத்தை வாங்கிக் கொள்ள வேண்டியது உங்களுடைய உரிமை. பணத்தைக் கொடுப்பது ஒரு சகோதரனாக எங்கள் கடமை என்று கூறினார்கள். சங்க நிர்வாகிகள் என்னிடம் எவ்வளவோ எடுத்து சொல்லியும் அவர்களை திருப்பி அனுப்பி விட்டோம். அதன் பிறகு மூன்று நாட்கள் கழித்து வந்து 20 ஆயிரம் ரூபாய் பணமாக கொடுத்தார்கள். உண்மையில் அப்போது அந்த பணம் மிகவும் தேவைப்பட்டது. மிகவும் உதவியாக இருந்தது. எனவே இம்முறை அந்த பணத்தை பெற்றுக் கொண்டோம். ஒரு மாதம் கழித்து உங்களுக்கான CVPA NNT நிதியை கொண்டு வருவோம் அதையும் நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறினார்கள். பொதுவாக பிற சங்கங்களில் யாரேனும் உறுப்பினர் ஒருவர் இறந்து போகும் தருணத்தில் ஆயிரம் ரூபாய்க்கு ஒரு மாலை வாங்கி வந்து அதை அணிவித்து இறுதி அஞ்சலி செய்து விட்டு போய்விடுவார்கள். என் விஷயத்தில் எனக்கு சேர வேண்டிய சங்க பணத்தை என்னிடம் சேர்ப்பதற்காக சங்க நிர்வாகிகள் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டார்கள்.இந்த விஷயத்தில் CVPA தனித்து நிற்பது எனக்கு பெருமையாக இருக்கிறது.

சங்க நிர்வாகிகள் என்னிடம் சொன்னது போல் சரியாக ஒரு மாதம் கழித்து CVPA NNT நிதியிலிருந்து 1 லட்சத்து 9 ஆயிரத்து 800 ரூபாயை காசோலையாக கொண்டு வந்து கொடுத்தார்கள். என் கணவர் CVPA NNT குழுவில் ஒரு கொடையாளராகவே சேர்ந்தார். ஆனால், CVPA NNT நிதி அவருக்கே பயனுள்ளதாக மாறும் என்றோ, அல்லது அதை பெரும் முதல் நபராக அவர் இருப்பார் என்றோ நாங்கள் யாரும் நினைத்துக்கூட பார்க்கவில்லை. இது கொஞ்சம் தர்ம சங்கடமாகத்தான் இருந்தது. இதை காலம் போட்ட புதிராக நினைக்கிறேன்.

மேலும் இதை எப்படி எடுத்துக் கொள்வது என்றும் எனக்குத் தெரியவில்லை. CVPA நிர்வாகிகள் ஒரு விதையை போட்டு இருக்கிறார்கள். இதன் மூலம் ஏராளமான குடும்பங்கள் பயன்பெறுவார்கள் என நினைக்கிறேன். சிறுதுளி பெருவெள்ளம் என்பதைப்போல, ஒவ்வொருவரும் தனித்தனியாக உதவும் போது, அது மிகப்பெரிய ஒரு விஷயமாக மாறி பாதிக்கப்பட்ட குடும்பங்களை போய் சேர்வதாகவே நான் கருதுகிறேன். இன்று என்னிடம் 1 லட்சத்து 9 ஆயிரத்து 800 ரூபாய்க்கான காசோலையை சங்க தலைவர், செயலாளர், மற்றும் சக நிர்வாகிகள் வழங்கியுள்ளார்கள். இதற்கு முதலில் நான் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். என்னையும் உங்கள் உடன் பிறந்த ஒரு சகோதரியாக சங்க நிர்வாகிகள் ஏற்றுக் கொண்டதற்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். சங்கத்தின் ஒற்றுமை மென் மேலும் ஓங்கி வளர வாழ்த்துகிறேன். சங்க நிர்வாகிகள் என்னிடம், உறுப்பினர்களின் வளர்ச்சிக்காக நிறைய திட்டங்கள் இருப்பதாக கூறினார்கள். அவை அனைத்தும் உறுப்பினர்களாகிய அனைவரும் பயனுள்ள திட்டமாக கொண்டு வருவதற்கு சங்க நிர்வாகிகளுக்கு ஊக்கம் அளித்து, அவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தில் அனைவரும், கொடையாளியாக சேர்ந்து, பிறருக்கு உதவி செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி! நன்றி!! நன்றி!!!

### அறிவிப்பு

வணக்கம்

நமது CVPA NNT உறுப்பினர் திரு.★R. SEKAR (SEKAR STILLS ADAMBAKKAM CVPA ID NO: 5074) அவர்கள் மரணம் அடைந்ததைத் தொடர்ந்து CVPANNT குழுவில் உள்ள உறுப்பினர்கள் CVPA NNT வேலட்டில் செலுத்திய தொகையிலிருந்து ரூபாய் 200 பிடித்தம் செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.



தென் சென்னை எஸ் –2, சோழிங்கநல்லூர் பகுதியை சேர்ந்த நமது CVPA உறுப்பினர் பாக்யா ஸ்டுடியோ, ராதாகிருஷ்ணன் அவர்களின் சகோதரர் மகள் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில், நமது சங்கத்தின் இந்நாள் முன்னாள் நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் பகுதி செயலாளர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்திய இனிமையான தருணம்.



வடசென்னை சேர்ந்த நமது CVPA உறுப்பினர் திரு. ரமேஷ் அவர்களுடைய மகளுக்கு நடைபெற்ற திருமணத்தில் நமது சங்க நிர்வாகிகள் மற்றும் பகுதிச் செயலாளர்கள் கலந்து கொண்டு மணமக்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.



வடசென்னை, பழைய வண்ணாரப்பேட்டை பகுதியை சேர்ந்த நமது CVPA உறுப்பினர், தனம் போட்டோஸ் திரு.பாலாஜி அவர்களின் திருமணத்தில் நமது சங்க செயலாளர் மற்றும் பகுதி செயலாளர் ஆகியோ கலந்து கொண்டு மணமக்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.



வடசென்னை, பழைய வண்ணாரப்பேட்டை பகுதியை சேர்ந்த நமது CVPA உறுப்பினர் கவிதா ஸ்டுடியோ திரு. சரவணன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்ற புதுமனை புகு விழாவில் நமது சங்க நிர்வாகிகள் மற்றும் பகுதி செயலாளர்கள் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.

## மருத்துவ உதவி

CVPAவில் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் ரினிவல் உள்ள உறுப்பினர்களுக்கு விபத்து ஏற்படும் பட்சத்தில் அவர்களுக்கு மருத்துவ உதவி வழங்கி வருகின்றனர். அதன் அடிப்படையில் திருவெற்றியூர் பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர்கள், திரு. முஸ்தபா மற்றும் திரு. சொர்ண குமார் தண்டையார்பேட்டை பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர், திரு. தியாகராஜன், ஆகியோருக்கு விபத்து ஏற்பட்டதன் காரணமாக தலா 5000 ரூபாய் வழங்கப்பட்டது.





தென் சென்னை எஸ்1 பகுதியை சேர்ந்த நமது சங்கத்தின் கோடம்பாக்கம் பகுதி செயலாளர் ரஜினிபத்மநாபன் அவர்களின் இளைய மகள் பவித்ரா, கேலோ இந்தியா, அஷ்மித்தா ஹாக்கி போட்டிக்காக தமிழ்நாடு அளவில் , மாவட்ட வாரியாக நடைபெற்ற, மகளிர் ஜுனியர்களுக்கான பிரிவில் சென்னை அணிக்காக விளையாடினார். இறுதிப் போட்டியில் சென்னை அணி வென்று முதல் இடத்தை பிடித்து கோப்பையை தட்டிச் சென்ற மகிழ்ச்சியான தருணம்....

# தினா கலர் லேபில் 20 கோடி ரூபாய் பணம் கையாடல் செய்த 3 ஊழியர்களை கைது செய்து சிறையில் அடைத்தனர்!



கோபாலகிருஷ்ணன்



கௌதம்



கிருஷ்ணமூர்த்தி

சென்னையை தலைமை இடமாக கொண்டு செயல்படும் தினா கலர் லேப் நிறுவனத்தின் மேலாளராக இருந்து வரும் ஜெயவேல் அவர்கள், சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அருண் அவர்களிடம், புகார் மனு ஒன்றை அளித்தார். அதில், கடந்த 35 ஆண்டுகளாக தமிழகம் முழுவதும் 52 கிளைகளுடன் எங்கள் *தினா கலர்லேப்* நிறுவனம் செயல்படுகிறது.


எங்கள் நிறுவனத்தில், சென்னை எல்லீஸ் ரோடு கிளை மற்றும் கோவை கிளைகளில் பணியாற்றிய, சென்னை விருகம்பாக்கம் சின்மயா நகரைச் சேர்ந்த கோபால் என்கிற கோபாலகிருஷ்ணன், கோவை கிளையைச் சேர்ந்த கௌதம், எங்கள் நிறுவனத்தின் தலைமை கணக்காளராக பணியாற்றிய கீழ்கட்டளையைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி ஆகிய மூவரும் இணைந்து, 2019-2024 வரை போலியாக கணக்கு எழுதி, **20 கோடி ரூபாய் வரை** மோசடி செய்து விட்டனர். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புகார் மனுவில் கூறியிருந்தார்.

இதுகுறித்து போலீஸ் கமிஷ்னர் அருண் உத்தரவின் பேரில்,மத்திய குற்றப்பிரிவு கூடுதல் கமிஷ்னர் ராதிகா மற்றும் உதவி கமிஷ்னர் சிவா மேற்பார்வையில், வழக்கு பதிவு செய்து, இன்ஸ்பெக்டர் சிவக்குமார் தலைமையில் தனிப்படை அமைத்து விசாரணையை மேற்கொண்டனர். இதில், கோபாலகிருஷ்ணன், கௌதம், கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட மூன்று பேரையும் பிடித்து விசாரித்ததில் பணத்தை ஏமாற்றி கையாடல் செய்த குற்றத்தை ஒப்புக் கொண்டனர்.

இதை அடுத்து மூன்று பேரையும் கைது செய்து, அவர்களிடம் இருந்து 65.5 சவரன் தங்க நகை, 600 கிராம் வெள்ளி பொருட்கள், MG Hector கார்-1, மற்றும் 30 லட்சம் ரூபாய் மதிப்புள்ள அசையா சொத்துக்களின் ஆவணங்களை பறிமுதல் செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட எதிரிகள் மூவரும் விசாரணைக்கு பின் 15.03.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.




நமக்கு நாமே திட்டத்தில் இணைந்த CVPA உறுப்பினர்கள் அனைவருக்கும் வணக்கம். இத்திட்டத்தில் இணைந்த, உறுப்பினருக்கு இழப்பீட்டு தொகை வழங்கியதை அடுத்து திட்டத்தில் இணைந்த உறுப்பினர்கள் இந்த QR CODE பயன்படுத்தி ரூபாய் 200 செலுத்துமாறு அன்போடு கேட்டுக் கொள்ளப்படுகிறது. QR CODE மூலம் பணம் செலுத்திய பிறகு www. cvpannt.com என்ற வெப்சைட்டில் உள் நுழைந்து ADD MONEY என்ற பகுதியில் உள் சென்று CHOOSE FILE சென்று நீங்கள் QR CODE மூலம் பணம் செலுத்திய ஸ்கிரீன்ஷாட் நகலை SUBMIT (அப்லோட்) கண்டிப்பாக செய்ய வேண்டும். செய்தால் மட்டுமே இப்பணம் முறையாக நமக்கு நாமே திட்டத்தில் உறுப்பினர்களின் தனிப்பட்ட வங்கிக் கணக்கில் இணைக்கப்படும். மேலும் இது பற்றிய மேலும் தகவல்களுக்கு அலுவலக எண் தரப்பட்டுள்ளது. 7824034734 . நன்றி வணக்கம்.




CVPA உறுப்பினர்களுக்கு வணக்கம். 2025 மார்ச் மாதம் ரெனிவல் முடிவடையும் உறுப்பினர்கள் தங்களது (ID CARD) அடையாள அட்டையை புதுப்பித்துக் கொள்ள மேலே உள்ள QR CODEl பயன்படுத்தி ரூபாய் ₹1000/- செலுத்தவும். (அல்லது) உங்கள் பகுதியை சார்ந்த பகுதி செயலாளர், துணைத் தலைவர், இணைச்செயலாளர் மூலமாக தொடர்பு கொண்டு அவர் வாயிலாகவும் புதுப்பித்துக் கொள்ளலாம். QR CODE மூலமாக பணம் செலுத்துபவர்கள் UPI transaction detailsl Screen Short எடுத்து தங்களின் உறுப்பினர் அடையாள எண் மற்றும் பெயரை பதிவு செய்து சங்க அலுவலக Whatsapp மொபைல் 7824034734 எண்ணிற்கு அனுப்பவும்.
CVPA நிர்வாகம்.

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper, **RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**
Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821 Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,** No.8. Muktharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351